## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்புறுபிட்டிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்புறுபிட்டிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்மீதி ரூபா 244,400 தொகை, பலவின இருப்பு மீதி ரூபா 109,237 தொகை, உள்ளூராட்சி சேவை ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 65,737 தொகை மற்றும் வீதவரி நிலுவை வருமான மீதி ரூபா 56,658 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், இரண்டு | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான வைப்புக்களில் இருந்து பெற வேண்டிய வட்டி ரூபா 3,440,754 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 04 வருமான தலைப்பு தொடர்பாக முற்பெறுவனவு ரூபா 145,227 மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | செலுத்த வேண்டிய ரூபா 58,127 தொகைக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்காததுடன் நிர்மாண வேலை கடன்கொடுத்தோருக்காக ரூபா 403,539 தொகை மிகையாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | இரண்டு நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெற வேண்டிய வட்டி ரூபா 1,263,277 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட 02 கணக்கு மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 14,473,421 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 16,809,116 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதிக்க முடியாதிருந்தது. | தனிப்பட்ட கோப்புக்கள் மற்றும் அட்டவணைகள் கண்டறிய முடியாதுள்ளது என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (அ) | நி.பி. 103 மற்றும் 104 | 2020 ஆண்டில் பண்டக் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட ரூபா 80,121 இற்கான பண்ட பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்படாமல் 2021 ஜனவரி 12 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தில் பதிவழிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | விரைவாக அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | நி.பி. 371 | நிதிப் பிரமாணங்களுக்கு புறம்பாக கொள்திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக சபைச் செயலாளரினால் ரூபா 341,000 இற்கான முற்பணத் தொகையொன்று பெற்றுக் கொண்டிருந்தது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள அனைத்து அவதானிப்புக்களையும் சரிசெய்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து பெறுகை அலுவல்களும் 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி மற்றும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க மேற்கொள்ளப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1,469,241 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1,662,212 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,270,000 | 3,095,961 | 2,756,975 | 5,853,303 | 3,243,280 | 7,426,909 | 3,671,984 | 5,514,317 |
| வாடகை | 9,266,800 | 9,974,533 | 12,335,479 | 3,964,191 | 8,204,800 | 9,004,009 | 6,767,122 | 6,325,137 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,286,500 | 1,429,581 | 1,431,881 | 36,000 | 1,018,500 | 1,391,990 | 2,229,813 | 38,300 |
| ஏனைய வருமானங்கள் | 27,912,000 | 22,416,817 | 22,602,742 | - | 1,055,000 | 26,382,554 | 26,906,202 | 185,925 |
| மொத்தம் | 42,735,300 | 36,916,892 | 39,127,077 | 9,853,494 | 13,521,580 | 44,205,462 | 39,575,121 | 12,063,679 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருட ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,309,064 தொகையாகக் காணப்பட்டதுடன் 1531 வீதவரி அலகுகள் தொடர்பாக ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 1,364,994 தொகையுடன் ரூபா 2,674,058 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,448,656 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,225,402 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | 2024 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையில் ரூபா 138,849 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது எனவும் ரூபா 1,086,015 தொகை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமாக கடை வாடகை செலுத்தும் 231 கடையறைகள் காணப்பட்டதுடன் அவற்றில் 66 கடையறைகளில் இருந்து ரூபா 3,726,430 இற்கான நிலுவை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அவற்றில் 06 | ரூபா 506,693 இற்கான தொகையொன்று அறவீடு செய்யப்பட்டுள்ளது எனவும் மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடையறைகள் தொடர்பாக ரூபா 100,000 இற்க மிகையான நிலுவை மீதிகள் காணப்பட்டது. | | |
| (இ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபப/பபாகொ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கையின் பந்திகள் 4 மற்றும் 5 இற்கு இணங்க 05 வர்த்தக கட்டிடத் தொகுதியை சேர்ந்த 10 கடையறைகளில் இருந்து ரூபா 125,000 தொகை ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்திருக்காததுடன் சபைக்கு சொந்தமான புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியில் தரைமாடியில் 06 ஆம் இலக்க கடையின் உடன்படிக்கை நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. | ஒரே தடவையில் பெறும் பணத்தை அறவீடு செய்வதற்காக கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டது எனவும் மற்றும் உடன்படிக்கையை நாளதுவரை ஆக்குவதற்காக அறிவிக்கப்பட்டது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 589,938 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 15,755,647 தொகை பெறவேண்டியிருந்தது. | 2024 மார்ச் 31 திகதியளவில் முத்திரைக் கட்டணம் ரூபா 8,249,188 தொகை அறவிடப்பட்டுள்ளது எனவும் மீதித் தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், நீதிமன்றத் தண்டப்பண மீதி அறவீடு செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126(viii) இன் பிரகாரம் சபைக்கு சொந்தமான நகர்சாராத எல்லையில் நிர்மாண வேலை தொடர்பாக வரைபுகள் அங்கீகரித்தல் மற்றும் சட்டரீதியற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன் என. | துணை விதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | எடுப்பதற்காக துணைச் சட்டங்கள் ஆக்குவதற்கு சட்டவாக்கஞ் செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் உக்கக் கூடிய மற்றும் உக்காத குப்பைகளை முறைப் பிரகாரம் அகற்றுவதற்கு சபையினால் முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்காததுடன் உக்கக் கூடிய குப்பைகளை கம்புறுபிட்டிய வாராந்த சந்தை வளவில் மற்றும் உக்காத குப்பைகளை பழைய தகனகூட வளவில் அகற்றப்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சந்தை வளவில் குப்பைகள் சேகரித்தல் குறைக்கப்பட்டுள்ளது எனவும் உக்காத குப்பைகளை மொன்ரோவியா வத்த குப்பை செயற்களத்திற்கு எடுத்துச் சென்று முறைப் பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | முறையான குப்பை முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப்படுத்த வேண்டும். |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகர் சங்கத்தில் வருடாந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக சபை உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக முன்னைய மற்றும் மீளாய்வாண்டுகளின் போது ரூபா 150,900 தொகை வெளித்தரனப்பினர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | தென் மாகாண ஆளுனர் செயலாளரின் மற்றும் தென் மாகாண பிரதான செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என. | தாபனக்கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 முதல் 2020 வரையான காலப் பகுதியில் 407 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு இருந்ததுடன் கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு 3 இற்கும் 7 வருடத்திற்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அவற்றில் 35 கட்டிடங்களுக்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ் பெறப்பட்டிருந்தது. | தற்போது கட்டிட வரைபுகள் அங்கீகரிக்கும் போது பிரதான நிபந்தனை ஒன்றாக இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொண்ட பின்னர் பயன்படுத்தும் படி அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜூலை 08 ஆந் திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பகுதி II பிரிவுகள் 4(1) மற்றும் 28(1) ஏற்பாடுகளுக்கு புறம்பாக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்று இன்றி முறையே 2021 ஆண்டின் போது மாப்பலான பிரதேசத்தில் கனத்தவத்த எனப்படும் கெடகாலகஹவத்த புடுகஹகொரட்டுவ எனப்படும் 01 ஏக்கர் 15.20 பர்சஸ் காணி துண்டுகளாகப் பகிரப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி அனுமதிப் பத்திரமொன்றின்றி சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நகர எல்லையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 04 கட்டிடங்களும் காணப்பட்டது. | குறைபாடுகளை பூர்த்தி செய்து விண்ணப்பத்திரங்களை மீண்டும் சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆண்டு முதல் 2023 ஆண்டு ஜூன் 30 திகதி வரையான காலப் பகுதியில் துணை பகிர்வு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த 10 காணிகள் தொடர்பாக தற்காலிக பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி அல்லது விற்பனையாளரினால் வழங்கப்பட்டிருந்த எதிர்பார்க்கப்படும் விற்பனை பெறுமதி மீதான 1 சதவீதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் விற்பனை செய்யப்பட்டிருந்த காணித் துண்டுகளின் உள்ளவாறான விற்பனை பெறுமதி மீதி அறவிடப்பட வேண்டிய 1 சதவீத கட்டணம் அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உண்மை விற்பனை பெறுமதியை பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் நிலுவைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.3 (அ) பெறுகை தொடர்பாக நடாத்தப்பட்ட பெறுகை கூட்டங்கள் | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,694,409 இற்கான பெறுமதியை உடைய 23 பெறுகைகள் தொடர்பாக தீர்மான அறிக்கைகள் சபையினால் பேணிச் சென்றிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 324,835 இற்கான பில்பத்திரப் பெறுமதிக்கான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 2 பாதைகளை அபிவிருத்தி செய்யும் போது பாதையில் மண் 208.45 கனமீற்றர்கள் மண்வெட்டப்பட்டு அகற்றுவதற்காக கொடுப்பனவு செய்யும் போது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இயந்திரத்தை பயன்படுத்தி மண் வெட்டுவதற்கான E1-027 இன் கீழ் 2022 ஆண்டில் அறிமுகப்படுத்தியிருந்த ரேட்களை பயன்படுத்தாமல் E1-003 இன் கீழ் மனித உழைப்பை பயன்படுத்தி அந்த கருமத்தை நிறைவேற்றுவதற்காக அறிமுகப்படுத்தியிருந்த ரேட்கள் பயன்படுத்தியிருந்தமையால் ரூபா 259,040 இற்கான தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | தொழிநுட்ப உத்தியோகத்தரினால் ஐய வினாவிற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 03 பாதைகளின் மற்றும் வடிகால்களின் மண் வெட்டி அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 297,255 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இயந்திரங்களை பயன்படுத்தி அந்த கருமங்கள் மேற்கொள்வதற்காக E1-027 மற்றும் DR-005A கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரேட்களை பயன்படுத்தாமல் மனித உழைப்பு மூலம் அந்தக் கருமத்தை மேற்கொள்வதற்கான E1-003 மற்றும் DR-001 இன் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரேட்களை பயன்படுத்தி கொடுப்பனவு | தொழிநுட்ப உத்தியோகத்தரினால் ஐய வினாவிற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்வதற்காக ரூபா 167,000 தொகை மிகையாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | சபையினால் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது சபை நிதியத்தின் ஏற்பாடுகள் மீது செயற்படுத்தப்பட்டிருந்த 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக 01 ஆம் இலக்க வேலை விடயம் நிறைவேற்றும் போது சபையினால் இயந்திரங்களை பயன்படுத்தி மண்ணை வெட்டுதல் மேற்கொள்ளப்பட்டு அதற்கான கொடுப்பனவு செய்யும் போது மனித உழைப்பின் மூலம் அடித்தளம் மற்றும் பாதையில் தோள்பகுதியை நிரப்புவதற்காக தென் மாகாண வீதி அபிவிருத்தி சபையினால் E1-001 இன் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரேட்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் 191.55 கனமீற்றர்கள் வெட்டுவதற்காக ரூபா 495,850 இற்கான தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மேற்கூறிய பாதைகளில் மண் பரப்பி தகர்ப்பதற்காக கொடுப்பனவு செய்யும் போது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் EW-003A இன் கீழ் மோட்டர் கிரேடர் மற்றும் கல் உருளை பயன்படுத்தப்பட்டு மண் தகர்ப்பதற்காக கொடுப்பனவு செய்வதற்காக அறிமுகப்படுத்தியிருந்த ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குப் பதிலாக EW-004 மற்றும் EW-006 ரேட்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 102,418 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்து. | தொழிநுட்ப உத்தியோகத்தரினால் ஐய வினாவிற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பொதுச் சந்தை வளவில் மீன் பலகை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்ட தரைப் பகுதிக்கு அண்மையில் காணப்படும் வடிகாலின் பக்கச்சுவர் நிர்மாணிக்கும் நிர்மாண வேலையின் வேலை விடய இலக்கம் 06 இன் கீழ் பக்கச்சுவர் நிர்மாணித்தல் தொடர்பாக இரண்டாம் வகுப்பு பலகை பயன்படுத்தி வடிவமைப்புக்கள் 87.60 சதுர மீற்றர்கள் | தொழிநுட்ப உத்தியோகத்தரினால் ஐய வினாவிற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

தயாரிப்பதற்காக கொடுப்பனவு செய்யும் போது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2022 செப்தெம்பர் மாதத்தில் ST-057 இன் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரேட்களை பயன்படுத்தி சதுர மீற்றர் ஒன்றிற்கு ரூபா 3,394.50 வீதம் ரூபா 297,858 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. வடிவமைப்புக்களுக்காக பதப்படுத்தப்பட்ட பலகைகள் (Plywood) பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் வடிவமைப்புக்கள் தயாரிப்பதற்கான கொடுப்பனவுகள் செய்யும் போது தென் மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தினால் 2022 ஆகஸ்ட் 22 திகதி சமர்ப்பித்திருந்த கட்டிட ரேட் பதிவேட்டின் படி CT-36 இன் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 1,439.00 இற்கான ரேட் பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும் அந்த ரேட்டிற்கு பதிலாக ST-057 ரேட்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 1,955.50 வீதம் ரூபா 171,302 தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தியிருந்தது.

(உ) பிரதேச சபையின் சந்தை வளவில் மீன் பலகைகள் நிர்மாணிக்கும் வேலையின் வேலை விடய இலக்கம் 06 இன் கீழ் வடிவமைப்பு தயாரிப்பதற்காக கொடுப்பனவு செய்யும் போது தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2022 செப்தெம்பர் மாதத்தில் ST-057 கீழ் இரண்டாம் வகுப்பு பலகை பயன்படுத்தி வடிவமைப்புக்கள் தயாரிப்பதற்காக அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 3,394.50 இற்கான ரேட் பயன்படுத்தப்பட்டு 49.90 சதுரஅடி வடிவமைப்புகளுக்காக ரூபா 169,386 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வடிவமைப்புக்கள் தயாரிப்பதற்காக பதப்படுத்தப்பட்ட பலகை (Plywood) பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக தென் மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தினால் 2022 ஆகஸ்ட் 22 திகதி சமர்ப்பித்திருந்த கட்டிட ரேட்கள் Ct-36 இன் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த

தொழிநுட்ப உத்தியோகத்தரினால் ஐய வினாவிற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை என.

உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| ரூபா 1,439.00 ரேட் பயன்படுத்தி கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும் அந்த ரேட்டுக்கு பதிலாக ST-057 ரேட் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 1,955.50 வீதம் ரூபா 97,579 தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தியிருந்தது. | | |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் கடமையாற்றிய இடமாற்றம் பெற்றுச் சென்ற சேவையை விட்டுச் சென்ற மற்றும் இறந்த 17 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 214,341 இற்கான கடன்மீதி பல வருட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |